தமிழ் நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1974 ஏப்ரல் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அரசினர் தீர்மானம்

வினா நேரத்தைத் தள்ளிவைத்தல்

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவை 22-ஆம் விதியின் கீழ் முதல் ஒரு மணி நேரம் "வினாக்கள்—விடைகள்" என்று உள்ளதை இன்று தள்ளிவைத்து, நிகழ்ச்சி நிரலில் அடுத்துள்ள "அரசினர் சட்ட முன்வடிவு" என்பதை எடுத்துக் கொள்ளவேண்டும்"

என்று நான் முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய பட்டியலில் உள்ள வினாக்கள் 8—4—1974 திங்கட்கிழமை அன்று எடுத்துக் கொள்ளப்படும்.

2. அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய—அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய—அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

TRUTH ALONE TRIUMPHS